ELEGIES

WRITTEN ON THE DEMISE OF

SRIMATHI

THANGACHI PILLAY,

MOTHER OF

SRIMAN

V. SITHAMBARAP PILLAY Avl.,

Engineer, Kurunagal District. Ceylon,

With a Short Account of her Ancestry.

Translated by Messrs.

M. V. SUBRAMANIA AIYER, M. R. A. S.,

&

M. GOPALAKRISHNA AIYER.

MADURA.

COMPILED BY

Mr. S. ARUMUGAM PILLAY

VIVEKA BHANU PRESS
MADURA.
1911

உ

சிவமயம்.

யாழ்ப்பாணம்

சாவகச்சேரிவாசராகிய

ஸ்ரீமாந்.

வைரமுத்துப்பிள்ளையவர்கள்

பத்தினியும்,

குருநாக்கல் டிஸ்டிரிக்ட்டு இஞ்சினீர்

ஸ்ரீமாந்.

சிதம்பரப்பிள்ளையவர்கள்

தாயாருமாகிய

தங்கச்சிப்பிள்ளை.

பரமபதமடைந்ததைக் குறித்து
இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள
சிறந்த வித்துவான்கள் கூறிய

சரமகவிகள்.

பூர்வ சரிதச் சுருக்கத்துடன்

மதுரை வாசி

ஸ்ரீ ச. ஆறுமுகப்பிள்ளையவர்களால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

சிவமயம்.

முகவுரை.

கருணைக் கடலாகிய பரமேசுவரன் ஆத்மகோடிகளுக்கெல்லாம் அனுக்கிரகஞ் செய்யும் பொருட்டு இப்பூவுலகின்கண்ணே கோயில் கொண்டருளும் புண்ணிய க்ஷேத்திரங்கள் எண்ணிறந்தன. அவற்றுள் சீதாபிராட்டியை மீட்கவேண்டிச் சேதுபந்தனஞ்செய்து இலங்கைசென்ற ஸ்ரீராமபிரான், இராவணன் முதலியோரைச் சம்ஹரித்துப் பிராட்டியுடன் திரும்பிவரும்போது, இந்தஅணை இருக்குமாகில், இராக்ஷஸர்கள் அதுவழியாக மீளவும் வந்து உலகினரை வருத்தநேருமென்னுங் கருணையினால், கையிலிருந்த தம் தனுசால் அதனைக் கீறியுடைத்தமையால் தனுக்கோடி என்று சொல்லப்படும் தீர்த்தமுதலான புண்ணிய தீர்த்தங்களையுடையதும், அந்த இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பெற்றதுமாகிய இராமேசுவரம் என்ற மஹாஸ்தலத்திலே ஒரு பிரபல சைவாதீனமடமானது சிலகாலத்துக்கு முன்வரை விளங்கிவந்தது. இம்மடத்துக்கு அதிபர்களாய் விளங்கிய பெரியோரெல்லாம் இராமநாதபுரம் ஸம்ஸ்த்தானத்தைச் சேர்ந்த மும்முடிகாத்தானில் வசித்துவரும் கார்காத்தவேளாளர் என்ற புகழ்பெற்ற வமிசத்தவர்களே; இவர்கட்குக் கார்காத்தவர் என்றுபெயர் வழங்கியதற்குக் காரணமாவது:-

முன்னொருகாலத்தில் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் மழைவேண்டி இந்திரனிடஞ் சென்றபோது சேரசோழர்களிருவரும் இந்திரனிட்ட தாழ்ந்த ஆசனத்திலிருக்கவும் சிவபத்தியிற்சிறந்த உக்கிரகுமார பாண்டியன்மட்டும் அவ்வாறு செய்யச்சம்மதியாமல் இந்திரனுடைய ஆசனத்திலேயே சென்றுஉட்காரவும் அதுபொறாத இந்திரன் சேரசோழர்கட்குமாத்திரம் மழைப்பேறளித்து பாண்டியனுக்கு அவ்வாறு அளிக்காமல் உபசாரமாத்திரம் செய்துஅனுப்பிவிட்டான். இக்குறையை மனத்திலே வைத்துக் கொண்டிருந்த பாண்டியன் ஒருக்கால் வேட்டைக்குச் சென்றிருந்தகாலையில் பொதியமலையில் இந்திரனுடைய புட்கலாவர்த்த முதலிய நான்கு மேகங்கள் படிந்திருக்கக்கண்டு அவற்றைப்பிடித்துச் சிறைப்படுத்தினன். அவற்றைச் சிறைமீட்கவேண்டி அவ்விந்திரன் பாண்டியனுடன் யுத்தஞ்செய்தும் முடியாமல் தோல்வியடைந்து ஓடிப்போய், பின்பு ஒருதூதன்மூலம் இனி, யான் உன்நாட்டுக்கு மழைபெய்யச் செய்கிறேன், மேகங்களைச் சிறையினின்றும் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவ்வார்த்தையில் நம்பிக்கைவைக்காத பாண்டியனிடத்தில் அவ்வரசனுக்கு மிக வேண்டியவனும், இந்திரனுக்கு நண்பனுமாகிய வேளாளனொருவன்சென்று, இந்திரனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில்தான் பிணையிருப்பதாகக்கூறி, மேகங்களைச் சிறையினின்று விடுமாறுவேண்டிக் கொண்டான், தம் உயிர்க்குக் கேடுவரும்படியான துன்பம்

வந்தாலும் தம் சொல்லைக் காத்துக் குற்றமற ஒழுகும் வேளாள குலதிலகனாகிய அவனது வார்த்தையை ஆப்தவாக்கியமாக நம்பிப் பாண்டியன் அம்மேகங்களைச் சிறை விடுவித்தான், இவ்வாறு பிணைநின்று மேகங்களைத் காத்தமையால், அவ்வேளாளன் மரபினர் கார்காத்தவேளாளர்'' எனச் சிறப்பித்து வழங்கப்பட்டார் என்பது.

இத்தகைய பெருமைவாய்ந்த கார்காத்த வேளாளர் மரபிலுதித்த இராமேசுவரமடாதிபதிகள் திரிகரண சுத்தியோடும் ஸ்ரீராமநாதனை இடைவிடாது தரிசனஞ் செய்பவராய், அப்பிரானது நித்ய நைமித்ய பூசை முதலியவற்றைத் தவறாது நடாத்திவருபவராய், குருலிங்க சங்கமபத்திகளிற் சிறந்தவராய், யாவரும் வணங்கத்தக்க மேன்மையுடையவராய் விளக்கமுற்றனர். இன்னும் இவர்கள் பெருமை அளவிடுந்தரத்ததன்று.

ஷை மடாலயத்தின், காரியங்களையெல்லாம் உள்ளன்போடும் பாதுகாத்து நடத்திவந்தவர்களிற் சிறந்து விளங்கினவர் பாண்டிநாட்டு நயினார் கோயிலை யடுத்துள்ள மும்முடிகாத்தானில் வசிக்கும் ஷை கார்காத்த குலத்துதித்தவரும் கல்வியறிவொழுக்கங்களிலும் குருலிங்க சங்கம பத்திகளிலும் மேம்பட்டவருமாகிய செண்பகப்பிள்ளை என்பவரே; இவரது தவப்புதல்வராகிய இராமநாதப்பிள்ளை என்பவர்

தமதில்வாழ்க்கைக்கியைந்த பார்வதியம்மை யென்னும் மனையாளோடும் யாழ்ப்பாணத்தைச்சார்ந்த சாவகச்சேரி என்னும் ஊரையடைந்து வாழ்ந்திருக்குங்காலத்தில், அவர்கள் தம் புண்ணியத்தால், சாந்தமே தக்க பூஷணமாகக் கொண்ட தங்கச்சிப்பிள்ளை என்னும் ஸ்திரீ ரத்னத்தைப் புத்திரியாகப் பெற்று, உரிய பருவத்திலே, குலாசாரங்களிற் றவறுத பெரும்புகழுடையவரான வைரமுத்துப்பிள்ளை யென்னும் உத்தம புருஷர்க்கு விவாகஞ்செய்து கொடுத்தனர்.

இவ்வம்மை பதிவிரதாதர்மந் தவறுதவராய், சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்தவராய் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலா" தொழுகினர். இவ்வம்மையார் பாற்கடல் வலம்புரிச் சங்கைப் பயந்தது போல புருஷசிரேஷ்டரான ஒரு குமாரரைப்பெற்றனர். அவர்யாரெனின் தமிழ் ஆங்கில பாஷைகளிற் றேர்ச்சி மிக்கவரும், குருலிங்க சங்கமபத்திகளிற் குறைவற விளங்குபவரும் கற்றோர்க்கும் மற்றோர்க்குங் களைகணனவரும் குருநாக்கல் டிஸ்டிரிக்ட் இஞ்சினீயர் உத்தியோகத்தை வகித்துவரும், "தோன்றிற் புகழொடு தோன்றுக என்னும் திருக்குறட்கு இலக்கியமானவருமாகிய ஸ்ரீமாந் சிதம்பரப்பிள்ளை யென்னும் சீரியோர். இவர்க்குப்பின் இவ்வம்மையார் வேறு குழந்தைகளையும் பெற்றனர், இவ்வாறு மக்கட்பேற்றினும் செல்வப் பேற்றினும் எவ்விதகுறைவுமின்றி வாழ்ந்துவந்து

சௌமியஹு பங்குனிமீ 12உ வெள்ளிக்கிழமை பௌர்ணமி திதியில் புத்திர மித்திர பந்துக்களும் பிறரும் துயருற்றிரங்க, இவ்வுலகவாழ்வை நீத்து ஈசுவரனுடைய திருவடி நீழலிற் சேர்ந்து பெருவாழ்வடைந்தனர்.

இப்பெண்ணரசியின் தேக வியோகத்தைக் குறித்து மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வான்களும், மற்றைக்கவிஞர்களும், யாழ்ப்பாணத்து வித்வான்களும் பாடிய சரமகவிகள் ஒன்றாகத் திரட்டப்பெற்று இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம்
மு. ரா. அருணாசலக்கவிராயர்.

இப்பாக்களைத் திரட்டி அச்சிட்டவர் கருத்து.

தாபரமுதல் தேவர் இறுதியாகிய எண்பத்துநான்கு நூறுயிர யோனிபேதத்தினின்றும் விரிந்த பேதங்கள் அளவில்லாதனவாம். தாபரம், கிருமி, பறவை, பசுமுதலிய மற்றெல்லாப் பிறவிகளையும் புண்ணிய மேலீட்டாற்கடந்துமானுடப்பிறவியில்வருதல் இலட்சம் யோசனை விஸ்தீரணமுள்ள லவண சமுத்திரத்தை இருகையினாலும் ஒருவன் நீந்திக் கரையேறுதல்போல் அவ்வளவு அருமையுடையதாகும். இதனை,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

என்று ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியவற்றாலறியலாகும்.

இவ்வருமையாகியசரீரத்தைப்பெற்றும் மிலேச்சர்கள் மிகுந்து வசிக்குந் தேசங்களிலேபோய்ப் பிறவாமல், வேதாகமாதி சாஸ்திரங்கள் வழங்கும் பரதகண்டத்திலே வந்து பிறப்பது எவ்வளவு புண்ணியம்! அதினும் புத்தர் சமணர் முதலிய புறச்சமயத்தினராய்ப் போய்ப் பிறவாமற் சிவபெருமானைப் பரமபதியாகக்கொண்ட உயர்ந்த சாதியிலே வந்து பிறப்பது மிகுந்த புண்ணியமன்றோ? இவ்வுண்மை,

"நரர்பயி றேயந் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியந்தா னாகுந்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே"

என்று அருணந்தி சிவாசாரியசுவாமிகள் அருளிய திருவாக்கினாற் றுணியப்படும்.

சங்கமமாகிய சரீரத்தின் வலப்புறத்திலே பிங்கலநாடியும், இடப்புறத்திலேஇடைநாடியும், இவ்விரண்டுக்கும் நடுவிலேசுழுமுனாநாடியும் உள்ளனவென்று தியானவிந்துபநிடதங்கூறுதல்போலவே தாவரமாகிய அண்டத்துவலப்புறநாடியாகியஇமாசலத்துக்கும், இடப்புறநாடியாகியஇலங்கைக்கும்,நடுவிலுள்ளது சுழுமுனா நாடியாகிய தில்லைவனம் என்று, சிதம்பர புராணங் கூறுகிறது. இமாசலம் இலங்கையென்னும் இவற்றுக்குட்பட்ட இடமெல்லாம் சிவபூமியேயாம். இதனை,

"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானினி லங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை யிவைசிவ பூமியே"

என்று திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளியிருத்தலாற் காண்க.

இச்சிவபூமியிலும் உயர்ந்த சாதியிலும் பிறந்து அச்சாதியாசாரம், சமயாசாரம், பாஷாபிமானம் முதலியவற்றில் மறந்தும் வழுவாதவராய் ஸ்ரீ ராமபெருமானால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற புண்ணிய க்ஷேத்திரமாகிய இராமேச்சுரத்திலிருந்த சைவ மடாதிபதிகளாய் அக்கோயில் நித்திய நைமித்தியாதியனவெல்லாம் முறைதவருது மிகுபத்தியா யுள்ளன்போடும் நடப்பித்து வந்தவர்களி லொருவராய்ச் சிறந்து விளங்கிய ஸ்ரீமாந் சண்பகப்பிள்ளையின், வம்சத்திலே யுதித்தவர் கற்பினிற் சிறந்த அற்புதமணியான தங்கச்சிப்பிள்ளை யென்பார். இம்மாதரசியார் பாற்கடல், கௌத்துவமணியைப் பயந்ததொப்ப குருலிங்க சங்கமபக்தி முதலிய நற்குண நற்செய்கைகளிற் சிறந்த ஸ்ரீமாந் சிதம்பரம்பிள்ளை யென்பவரைப்பெற்ருர். அவர் துவாதசாந்தபுரமாகிய மதுராபுரியின் கண்ணேயிருந்த முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும் முத்திறச் சங்கப் புலவர்களுள்ளே திரிபுரமெரித்த

விரிசடைக் கடவுளாகிய ஸ்ரீ சோமசுந்தரப்பெருமான் தாமும் இறையனார் எனப் பெயரியபுலவராக வெழுந்தருளி யிருந்து தெலுங்கு, கன்னடம், இந்துஸ்தானி முதலிய பிறபாஷைகளை வளர்க்காது அமிழ்தினுமினிய தமிழ்ப்பாஷையையே அன்பினோடு வளர்த்து வந்தார் என்றும், இம்மானுடப் பிறவி நமக்கு வாய்த்தது சிவபெருமானுக்குத் தொண்டு செய்து உய்தற்பொருட்டென்றும், அச் சிவபெருமானுக்கு அழியாத் திருமேனியாய் அவருக்கு மீளா வடிமையாயுள்ள ஆன்மாவுக்கோர் ஒதுக்கிடமாயும், அவ்வான்மாவுக்கோர் முத்தி சாதனக்கருவியாயுமுள்ள இந்தச் சரீரத்தைப் பாதுகாத்தற்கு வேண்டப்பட்டது பொருளாமென்றும், அப்பொருளைச் சம்பாதித்தற்குச் சாதனமாத்திரமாகவுள்ளது அரசினரது ஆங்கிலபாஷையாமென்றும் உள்ளவாறுணர்ந்து அங்ஙனம் உணர்ந்தவாறே,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்பதற்கிணங்க உத்தியோகமுறைகளை ஒழுங்காக நடத்தி அரசினர், நாட்டார் ஆகிய இவர்களின் நன்கு மதிப்பைப் பெரிதும் பெற்றுவருவதோடு,

"எத்தவத்தைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே"

என்றபடி மனத்தைச் சிவத்தினிடம் செலுத்தி "சிவ சாத்திரங்களை ஆராய்தலினும் சனங்களிடத்தில் அந்தரியாமியாயிருக்கும் சிவபிரானை உமையம்மையாரோடு தியானிக்கின்றவர்கள் அன்னத்தை நாவினலுண்கின்றார்கள்" என்று இருக்குவேதமும், "அருட்சத்தியோடுகூடச் சிவபிரானை எக்காலமும் தியானிப்பவர் ரசம் நிறைந்த அமிர்தோதகத்தை நாவினல் கிரகிக்கின்றார்கள்" என்று பராசபுராணமும்,

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில், ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில், அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே"

என்று தமிழ்வேதமுங் கூறியவாறு சிவபிரானை ஆராதித்தலிலும் தம் வாழ்நாளை வீணாளாக்காது நன்னாளாக்கும் உத்தமோத்தமகுணமுடையராய்த் தம் குலத்துள்ள முன்னோரின் முறை வழுவாதவராய் ஒழுகுவாராயினர்.

இவர் மாதாவின் சிவலோகப் பிராப்தியைக் கேள்வியுற்ற மதுரைமாநகரின் நான்காவது தமிழ்ச்சங்கத்துப் புலவர்களிற் சிலரும் பாண்டிநாட்டிலேயிருந்து போய்க் குடி-

யேறிய "விஞ்ஞானபுரம்" என்னும் ஈழமண்டலத்து வித்வான்கள் சிலரும் பாடிய சரமகவிகளில் "நானுமறியே னவளும் பொய்சொல்லாள்" என்றவாறு உயிர்கட்கு இடுக்கண் வந்த காலத்தும் சொல்லைக் காப்பாற்றிக் குற்றமற வொழுகும் கார்காத்த வேளாளகுலமாதாகிய இவரது உயர் மரபின் பெருமையைக் கூறியுள்ளார்.

இவ்வருமைத்தாயினது சரமகவிகளைத் திரட்டிஒருங்குசேர்த்துப் புஸ்தக ரூபமாக வெளியிடின் இதைப் பார்த்து தற்காலம் இனிய கனிகள் தன் கைக்கணுளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காஞ்சுரங்காய்களை யருந்துவார் போலவும், கறக்கின்ற பசுவானது நிற்க, மலடு கறந்து உளந்தளர்கின்றார்போலவும், நமது சுயபாஷையாகிய இனிய தமிழ்ப்பாஷையை மறந்து ஆங்கிலேய பாஷையை இடைவிடாது பயின்று அவ்வாங்கிலேய பாஷைக்குரிய ஆங்கிலேய ஆசாரத்திற்றலைப்பட்டுஅவ்வாங்கிலேயபாஷையையே இகபரத்திற்குச்சாதனமென்று கொண்டொழுகி, இறுதியில் தமக்குத்தாமேவஞ்சகராய்த்தமக்கும்பிறர்க்கும்உதவாது நிற்கும் இப்பாண்டிநாட்டிலும் பாண்டிநாட்டைச் சூழ்ந்துள்ள மற்றைச்சேர சோழமண்டலத்திலும் சேர சோழ பாண்டிமண்டலங்களினின்றும் போய்க் குடியேறிய ஈழமண்டலத்திலும்உள்ள நம் இந்து சகோதரர்கள் அவ்வாறெல்லாமாகாமல்,

"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லாற்சொர் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே"

என ஔவைப் பிராட்டியார் சொல்லிய திருவாக்கிற்கிணங்க, கொல்லாமை, பொறை, அன்பு, குருபக்தி, சிவபக்தி, சிவனடியார் பக்தி முதலிய நற்குணங்களை அவரவரென்று விரும்பியும், அவ்வவரவை "கருதுவார் கருத்தறிந்து முடிப்பாரும்" வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளுபவரும் ஆகிய பெருங்கருணைத் தடங்கடலாகியசிவபெருமான் அறிந்து அவர்கள் நல்லறிவிற்றலைப்பட் டுய்யும்வண்ணம் திருவருள் புரிவார் என்பது கருதியும் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கி முடித்தேன்.

இப்புத்தகத்திற்குத் தமிழில் முகவுரையெழுதி உதவிய கனவான்ஸ்ரீமத் மு. ரா. அருணசலக்கவிராயரவர்களுக்கும், இங்கிலீஷ் முகவுரை எழுதிய ஸ்ரீமத் கோபாலகிருஷ்ணஐயங்காரவர்களுக்கும், ஒவ்வொரு பாடல்களின் பொழிப்புரைகளுக்கும் நேர் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு எழுதிக்கொடுத்த ஸ்ரீமத் எம். வி. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும், ஒவ்வொரு பாடலையும் நேரிங்கிலீஷில் மொழிபெயர்த்துக்கொடுத்த ஸ்ரீமத் எம். கோபாலகிருஷ்ண ஐயரவர்களுக்கும், அச்சியந்திரசாலையில் அச்சிடும்பொழுது பிழைகளில்லாது அடிக்கடி பார்வை வைத்துக்குறையின்றிப் பூர்த்திசெய்துதவிய விவேகபாநு அச்சாபீஸ் முதல்வர் ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களுக்கும் இச்சிறுநூல் வெளிவரும் விஷயமாய்எனக்கு உதவிபுரிந்த மற்றும்அன்பர்கள் யாவருக்கும் நான் மனப்பூர்வமாக வந்தனமளிக்கின்றேன்.

சுபம்! பொங்கும் மங்கள மெங்கணும் தங்குக.

ச. ஆறுமுகம்பிள்ளை,

மதுரைவாசன்.

INTRODUCTION.

A great *soul* has passed away from our midst. In the famous island of Rameswaram containing the holy Thirtha of Dhanushkoti and the sacred temple founded by Sri Rama on his way back from Lanka ridding it of its monster king Ravana, there was, till recently, a Saivite Mutt presided over by a sect of Vellalas called Karkarthars, the chief among whom was the learned and virtuous Shenbagam Pillai who lived at Mummudikathan near Nainarkoil of the Pandiyan kingdom. His son, the famous Ramanatha Pillay, with his amialable wife, Parvathi Ammai settled at Chavakachary, Jaffna (in Ceylon); and there the happy couple were blessed with the gem of a daughter, *Thangachippillai,* the subject of the following *elegies.* Thangachippiliai brought forth a, son named Chidambaram Pillai among others, worthy of her mother and whose name as a high and responsible officer of Govt. extended far and wide in that part of Ceylon; at her

seventy fifth year she shuffled off her mortal coil on 12th Panguni of Saumiya (*i. e. 25th March 1910*) to take her place at the feet of Paramasiva in Kailasa. May her soul rest in peace!

The community of "Karkathars"—literally protector of the clouds-derives its illustrious name to the tradition that an ancestor of theirs offered himself as a hostage to the renowned Saivite Pandyan king UgrakumaraPandya, for the due fulfilment by Indra of his promise to supply rain to the Pandyan kingdom, a promise without which Indra found himself unable to redeem the four clouds imprisoned by the said Pandyan king who was enraged at Indra's failure to grant rain to his kingdom on account of his claiming equal seat with himself when the Pandyan king visited Indra's world for getting the grant.

The Karkathar community was the cause of the restoration of the friendly relationship between Indra and the Pandyan king, which was indispensably necessary for the welfare of the Pandyan subjects.

Though in affluent circumstances, *Thangachippillai* was a model of Siva Bhakti and renunciation, the touchstone of true religious spirit. Her character was saintly. She enjoyed peace. A charge is often laid at our door that we do not treat our women with due regard which is unfounded. That merit is duly recognised among us irrespective of sex or birth, is illustrated by the fact that Nayanars and Alwars are adored by us even to-day. This collection of *elegies* sung by representative Vidwans of different castes and creed in praise of the departed worthy lady now offered to the public is illustrative of the above.

In conclusion I beg to add that Mr. Arumugam Pillai of Madura has taken great pains to gather these elegies and to present them in a book form to the public for reading during hours of relaxation from business and I trust the collections are sufficient to impart a deep, calm pleasure and happiness to those who contemplate the manifold aspects of human life.

JANUARY 1911. } T. GOPALAKRISHNAN, B. A.

MADURA.

சிவமயம்.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்துப் புலவர்களில்
ஒருவரும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமாகிய

ஸ்ரீமத் ரா. இராகவையங்கார் அவர்கள்

கூறியவை

அறுசீரடிவிருத்தம்

கும்பிடுவோர்க் கருள்சேது குலவுசெம்பி
நாடதனிற் கோயில் கொண்ட
நம்பெருமான் மருதையெனு நயினார்கோ
யிலின்பாங்கர் நலமே யோங்கு
மும்முடிகாத் தானுள்ளோர் முன்னாளிற்
பாண்டியனான் முகில்க ளுற்ற
வெம்புசிறை மீட்டற்கா விரைந்துதவு
கார்காத்த வேளி ரம்மா. (க)

(இதன்-பொருள்) வணங்குபவர்க்கு அருளைச்செய்கின்ற சேது தீர்த்தத்தைப்பொருந்திய செம்பிநாட்டிற் கோயில் கொண்டருளுஞ் சிவபெருமான் திருப்பதிகளிலே மருதூரென வழங்கும் நயினார் கோயிலின் பக்கத்து வளமிகுந்த

மும்முடிகாத்தானென்னு மூரில் இருப்பவர்கள் (யாவரெ
னில்) முற்காலத்தே பாண்டியனால் (இந்திரனது புட்கலா
வர்த்த முதலிய நான்கு) மேகங்கள் அடைந்த கொடிய
சிறையை நீக்கவேண்டிப் (பிணையாக நின்று) விரைவாக
வந்து உதவிய கார்காத்தவேளாளரேயாவர்.

I By Mr. M. RAGAVA IYENGAR,
Editor, "Sendamil," and Pundit of
"The Tamil Sangam, Madura."

Who are they that dwell in the fertile land of Mummudikathan near Nainarkovil *alias* Maruthur, one of the sacred shrines of Sivapiran, situated in the *Sembinadu* that contains *Sethu Thirtham* (holy water) conferring happiness on the worshippers? They are the * Vellalars who once readily helped Indra by getting his (clouds) released from their bondage of Pandiyan, by standing as security, and thus earned the eminent title of Karkatha Vellalars.

---

* Vellalars who protected the Kars-clouds.

Note:—A history of Vellalars is given in "Castes and Tribes of Southern India" by Edgar Thurston C. I. E. Superintendent, Madras Government Museum, Correspondent, Etranger Societe & d' Anthropologie de Paris etc.

அத்தகைய கார்காத்த வேளாள ரருங்கீர்த்தி
யளக்கற் பாற்றோ
இத்தரையி லன்னோரே யிராமேசர் பதம்பணிந்திவ்
வுலகின் மேய
முத்தர்கள்போ லக்கோவி லாதீன கர்த்தர்களா
முன்னுற் றோரம்
மெத்துகுல கிரியிற்பின் றங்கச்சி யெனுந்தீபம்
விளங்கிற் றன்றோ. (உ)

(இ-ள்) இப்படிப்பட்ட கார்காத்தவேளாளருடைய (பிறர்பெறுதற்கு) அரியகீர்த்தி அளக்கத்தக்கதோ (இல்லை) இவ்வுலகில் அம்மரபில் உள்ளவர்களே ஸ்ரீ இராமநாதனுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு ஜீவன் முக்தர்களைப் போல அவ்விராமேசுரக் கோயிலின் மடாதிபதிகளாய் முன்னிருந்தவர்கள், உயர்ந்த அக்கார்காத்த குலமாகிய பர்வதத்தில் பின்பு தங்கச்சியம்மை யெனும் ஒருதீபமானது உண்டாகிப் பிரகாசித்தது.

II. Is it possible to describe the importance of such rare name and fame achieved by Karkatha Vellalars? No. It is their descendants who were originally the *Athinakarthas* (Trustees) of the Rameswaram Mutt worshipping at the holy feet of Sri

Ramanath like Jeevanmukthas. Like a light shone on the summit of a mountain, Thangachipillai sprang up from the noble and illustrious mountain called Karkatha Vellala family.

பொன்னேயென் றுலகோதப் புகழோடு தங்கச்சி
    பொருந்திப் பூவிற்
தன்னேரி லாதகுண சம்பந்தன்
    சிதம்பரனூர் தநய னோடு
மன்னேருஞ் சுற்றமொடு மனக்குறையொன்
    றில்லாது வாழ்ந்து பின்ன
ரென்னேயென் றவரிரங்க வீசனடி நிழலடைந்தா
    ளினிதி னம்மா. (௩)

(இ-ள்) இலக்குமிதேவியே இவள் என்று உலகத்தவர் சொல்லுமாறு கீர்த்தியோடு தங்கச்சி யென்னும் அந்த மங்கை இருந்து, இவ்வுலகில் தனக்கு நேரில்லாத குணங்கள் நிரம்பியவனாகிய சிதம்பரப்பிள்ளை யென்னும் புத்திரனோடும் செல்வமிக்க சுற்றத்தாரோடும் மனக்குறைவே யில்லாமல் வாழ்ந்து, பின்பு இது என், என்று புத்திரனும் சுற்றத்தாரும் இரங்கும்படி சிவபெருமான் திருவடி நீழலைச் சுகமாக அடைந்தாள்.

III. The lady Thangachi, having flourished with such good qualities as to be called *Maha-*

lakshmi by the people, and lived happily in the midst of her son *Chidamparapillai* of rare good qualities, and of her wealthy relatives, without the least care and anxiety, left this world to the great grief of all and reached peacefully the feet of Lord Siva.

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவருளொருவரும் ஷை
சங்கக் கலாசாலை உபாத்தியாயருமாகிய

ஸ்ரீமத் N. சுந்தரேசுவரஐயர் அவர்கள் பாடியவை.

பஞ்சவர்கோன் றளையிட்ட புயல்கட்குப்
பிணையென்று பரிந்து வந்தே
யஞ்சலெனப் புரந்தரன்பா லுய்த்திடுகா ரணத்தாலே
யகிலத் தென்றுந்
துஞ்சலிலாக் கார்காத்த மரபினரென் றேத்துபுகழ்த்
தூய்மை வாய்ந்த
வெஞ்சலிலாக் குலத்துதித்தோ னிராமேசர்
தாளிணையை யேத்து மேலோன். (க)

(இ-ள்) பாண்டியனால் (ஒருகாலத்தில்) சிறையிலிடப் பட்டமேகங்கட்குப் பயத்தை நீக்கித் தாங்களே அவற்றிற்

குப் பிணையிருப்பதாகப் (பாண்டியன்) முன்வந்து (சிறை விடுவித்து அவற்றை முன்போல) இந்திரனிடஞ் சேரச் செய்த காரணம்பற்றி இவ்வுலகோர் என்றும் குறைவில்லாத கார்காத்த "வம்சத்தவர்" என்று ஓதப்பெற்ற புகழும் பரிசுத்தமும் பொருந்திய அழியாத குலத்துதித்தவனும் ஸ்ரீ இராமநாதரது திருவடிகளைத் துதிக்கும் பெரியவனும்.

சீராருஞ் செண்பகவேண் மரபென்னும் பாற்கடலிற்
  சிறந்து தோன்று
மேராரு மதிநிகருஞ் சிதம்பரமா றனைத்தவத்தா
  லீன்ற தாயாம்
பேராரு மருந்ததிநேர் தங்கச்சிப் பிள்ளையெனும்
  பெரியா ளிந்தப்
பாராரு நிலைநீத்துச் சிவபதஞ்சேர் பெருமை
  யெவர் பகர்வார் மாதோ. (உ)

(இ-ள்) சிறப்பு வாய்ந்த சண்பகப்பிள்ளை வம்சம் என்ற பாற்கடலிலே மிகவும் பிரகாசிக்கும் அழகானசந்திரன் போன்றவனுமானவன் சிதம்பரப்பிள்ளையெனும் பிரபு; இப்பிரபுவை (தான்செய்த) தவத்தாற் பெற்ற தாயானவள் புகழ் மிகுந்த அருந்ததிபோலுங் கற்புடைய தங்கச்சிப்பிள்ளை யென்ற பெரியவள்; அவ்வம்மை இப்பூவுலக வாழ்வை விட்டுச் சிவபெருமான் றிருவடியைச் சேர்ந்தபெருமை எவர் வர்ணித்துச் சொல்ல முடியும்.

By Mr. N. SUNDARESWARA IYER,
Professor, Sethupathi Sentamil Kalasala,
"Tamil Sangam," Madura.

I & II. Who can describe the greatness of Thangachi Pillai, who resembled the famous Arunthathi and who gave up this world to reach the glorious feet of Sivaperuman? Who is that lady? She was the mother of *Chidamparapillai* who, like the moon on the Milky Ocean, shone in the illustrious family of *Shenbagam Pillai*, who was born of the imperishable family which got the title of 'Karkarthar,' owing to one of its members having come forward in ancient times to stand as security and to release Indra's clouds from the bondage of Pandiyan, and who was also a true worshipper of Sri Ramanathan.

மதுரைத் தமிழ்ச் சங்கம் நூற் பரிசோதகராகிய,
சேற்றூர், ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக் கவிராயர்
அவர்கள் பாடியவை.

சிவபிரான் பாண்டியனா யரசுபுரி மதுரைநகர்
திகழு மேலோன்

"றவமிடுமா தினத்தைச் சார்ந்திரா மேசுரத்திற்
றயங்கு மேன்மை
யுவமையிலாச் சைவமடா லயத்தினிற்கா
ரியமெலா முள்ளன் பாலே
நவமுறமுன் னடாத்திவந்த சண்பகப்பிள்
ளைக்குமைந்த னிராம நாதன். (க)

(இ-ள்) சிவபிரானே (முற்காலத்தில்) பாண்டியனு யிருந்து அரசுசெய்யப் பெற்ற மதுரைநகரில் விளங்கும் பெருந்தவமிக்க திருஞானசம்பந்த மடாதிபதியின் சம்பந்தம் பெற்றதாய் இராமேசுவரத்தில் விளங்குவதும் மேன்மையில் தனக்கு உவமையற்றதுமான சைவமடாலயத்தின் காரியாதிகளையெல்லாம் முற்காலத்தில் உள்ளன்போடு நடாத்திவந்த சண்பகப்பிள்ளை யென்பார்க்கு இராமநாதப்பிள்ளை யென்பவர் புத்திரர்.

By Mr. M. R. ARUNACHALA KAVIRAYAR,

Pundit of the "Tamil Sangam," Madura.

I. There was one famous gentleman who, unrivalled in greatness and fame, managed, with heart and soul, all the affairs of the Siva Mutt in Rameswaram, which was attached to the Tirugnanasamandha Murthi Mutt in Madura, once presided over by

Sivaperuman Himself as Pandiyan. That gentleman was called *Shenbagampillai* who had a son named *Ramanathapillai*.

அன்னவன்கார் காத்தகுலந் தனக்கொருதீ
பம்போல்வா னருமை யாகப்
பொன்னனைய தங்கச்சிப் பிள்ளையென்னு
மொருமகளைப் புகழ்பெறத் தோன்றக்
முன்னமீன் றன்னவளு நற்குணநற்
செய்கைகளின் முதிர்ச்சி யுள்ளா
ளென்னருங்கண் டுவகையுறுஞ் சிதம்பரமென்
றொருமைந்த னீன்றாண் மன்னோ.

(இ-ள்) அவர் கார்காத்த குலமாகிய குன்றுக்கு ஒருதீபம் போல்வார்; அவர் இலக்குமிக்குச் சமானமான தங்கச்சிப் பிள்ளையெனும் புத்திரியைப் புகழ் பெற்று விளங்கும்படி முதன்மையாகப் பெற்றார். அப் பெண்ணும் நற்குண நற்செய்கைகள் நிரம்பினவளாய் யாவரும் பார்த்து மகிழ்ச்சி யுறும்படியான சிதம்பரப்பிள்ளை யென்னும் ஒப்பற்ற புத்திரனைப்பெற்று விளங்கினாள்.

II He was a light to the Karkarthar family. He was blessed with a daughter named Thangachipillai, resembling Lakshmi and full of good qualities and deeds. She gave birth to a peerless son named *Chidambaram pillai*,

அந்தமைந்தன் கல்வியினுற் கேள்வியினுற்
கொடையினு லன்பால் வாக்கா
லெந்தநய மும்பொருந்துங் குணங்களா
லுயர்ந்தோங்கி யிஞ்சி னீராய்
முந்திவருமுத்தியோ கத்தினிலே
சிறப்புற்று முன்னீர் சூழு
மிந்தவுல கத்தினிலே பெரும்புகழ்பெற்
ருனிவனுக் கிணையார் மாதோ. (3.)

(இ-ள்) அந்தப் புத்திரர் கல்வி கேள்வி கொடை அன்பு வாக்குறுதி முதலிய எல்லா நற்குணங்களாலும் உயர்ந்து விளங்கியதோடு இஞ்சினீயர் என்ற மேலான உத்தியோகத்தாலுஞ் சிறந்து கடல்சூழ்ந்த உலகத்தில் மிக்க புகழடைந்தார். இவருக்கு யாவர் ஒப்பார்.

III. That son, well known for his high education, researches, charity, love, rectitude &c. is holding a high position as Engineer, and has distinguished himself in his official career. Who is there in this sea-girt world to equal him?

இத்தகைய புகழ்பெறுநற் சிதம்பரமால்
பரம்பரையி னிடையே வந்
துத்தமர்பற் பலர்நயினுர் கோவிலைச்சூழ்ந்
திருக்கின்ற வூரென் றேதுஞ்
சித்தமகிழ் மும்முடிகாத் தானிலே
யிருக்கின்ருர் சிவபி ரான்றன்
பத்தரா மிவர்பெருமை யாவரே
யின்னதெனப் பகரு வாரே. (4.)

(இ-ள்) இப்பேர்ப்பட்ட நற்புகழ்பெற்ற சிதம்பரப்பிள்ளையின் வம்ச பரம்பரையில் உதித்த உத்தமர்பலர் நயினார்கோவிலையடுத்த ஊராகச் சொல்லப்படு மனமகிழத்தக்க மும்முடிகாத்தானிலே இப்பொழுதும் வசிக்கின்றார்கள். சிவபத்தர்களாகிய இவர்களது பெருமையை இவ்வளவு என்று சொல்ல வல்லவர் யாவர் உளர்?

IV. Many are the great men who are the descendants of this noble and illustrious family to which this amiable *Chidamparam Pillai* belongs, and who (the great men) even now live in Mummudikathan near Nainarkovil. Who is there that can describe fully the greatness of these Sivabhaktas?

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீமத்
மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்க ளியற்றிய
கவிகள்.

ஈதுசிவ லோகமெனத் திருவாத வூர்வருமெம்
மிறைவர் முன்னே
யோதுதமிழ்த் தென்னாட்டின் மும்முடிகாத் தானென்னு
மூரிற் றோன்றிச்
சேதுநிலை பெறுமிராமேச்சுரத்தி லரன்பணிகள்
சிறப்ப வாற்றிப்
போதுகமழ் யாழ்ப்பாண வயிரமுத்துப் பூமன்மணம்
பொருந்தி வாழ்ந்தே. (1)

கற்பினிலக் கணமன்பு பொறுமைகொடை
சிவநேயங் கல்வி ஞானம்
பொற்புநய வுரைமுதலா நலமனைத்து மெந்நாளும்
பொருந்தி வாழ்ந்த
வற்புதசற் குணமணியே சிதம்பரவள் ளலையீன்ற
வருமைத் தாயே
நற்புனித தங்கச்சிப் பிள்ளையம்மே நினைக்காணு
நாளெந் நாளோ. (2)

ஆர்காத்த வூறினுமுல கமையாது கார்காத்த
லடாதே லென்னப்
பார்காத்த மன்னவரும் பகருவரக் காரிணையும்
பண்டே காத்துக்
கார்காத்தா ரெனப்பெற்ற நற்குலத்து மணிவிளக்கே
கருதி நாளுஞ்
சீர்காத்த தங்கச்சிப் பிள்ளையம்மே சிவனடிக்கீழ்ச்
சேர்ந்தாய் நீயே. (3)

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலை மானேஜராகிய
மகா-௱-௱-ஸ்ரீ

அ. முத்துச்சாமிப்பிள்ளை யவர்களியற்றியவை.

—(*)—

கார்காத்த காரணத்தாற் கார்காத்தா ரெனவுலகோர்
கழறு மேன்மைச்

சீர்காத்த வேளாளர் குலத்தினுக்கோர் திலகமெனச்
செனித்து நாளும்
பார்போற்றக் கற்பினிலக் கணமமைந்தே யில்லறத்தைப்
பண்பி னாற்றி
யேர்பூத்த கொடைபலவு ளிவள்கொடையே யதிகமென
வீண்டு வாழ்த்த. (1)

கடவுளுறை தளிபெருகத் தவயோக ருறைமடங்கள்
கதிக்கத் தொண்டர்
கடவுள்பணி நனியியற்றக் கனிந்த தமிழ்க் கவிவாணர்
களிக்க வார்வத்
துடனறங்கள் பலவாற்றி நற்குணநற் செய்கையெலா
மொருங்கே பேணிக்
கடலுலகிற் செயற்கருநற் கருமங்கள் செயல்மனிதர்
கடனு மென்றே. (2)

பெரியார்பாற் கற்றலுடன் கேட்டலினு னில்லறங்கள்
பிறங்கச் செய்தாய்
பரிவாமப் புண்ணியமே யுருவெடுத்த தெனவெவரும்
பலகா லேத்த
வொருவாத நற்செயலு மிஞ்சினீ ருத்யோக
முவப்பச் செய்யும்
பெருவாய்மைச் சிதம்பரப்போர்ச் சுதன்ருயேநின்பெருமை
பேசற் பாற்றே. (3)

நின்செயலை யவனியுளோர் கண்டேனு முய்யும்வண
நிலாதிப் பூவிட்
டுன்றகைமை வானவர்க ளறிந்துய்யச் சென்றனையோ
வுனைப்பி ரிந்து
துன்புறுத னீகாணிற் சற்றேனுஞ் சகிப்பாயோ
துயரென் சொல்வே
மன்புமிகு தங்கச்சிப் பிள்ளையெனும் பூமாதே
யருமைத் தாயே. (4)

மகா-௱-௱-ஸ்ரீ வித்வான்

S. பாண்டிய ஓதுவாரவர்கள் பாடியவை.

—:—

பொன்னுருந்திருமுடியும் புதுப்புனலும்பிறைக்கொழுந்தும்
பொலியப் பொன்னின்
மின்னுரு மணிமாடக் கூடலின்முன் றொருகூறாய்
விளங்கு மேலோன்
றன்னாடா யிலகுதனித் தமிழ்ப்பாண்டி நாட்டினிடைத்
தகைமை வாய்ந்த
வெந்நாடும் புகழ்வளனார் மும்முடிகாத் தானென்னு
மெழில்செய் யூரில். (1)

பல்வளனும் பல்கலையும் பல்லாண்டு பல்லாண்டாய்ப்
படைத்து வாழுஞ்
சொல்வளனார் தூயநெறி வேளாளர் குலஞ்சிறக்கச்
சொல்லிற் றேவ
ரெல்வளைத்தோ ளிந்த்ராணி கொழுநற்கச் சந்தவிர்ப்பா
னெழுகார் காத்தார்
நல்வளனார் மரபோங்க நாற்றிசையும் புகழோங்க
நலமிக் கோங்கி. (2)

தேன்மகிழுஞ் செழுஞ்சோலைத் தென்மதுரை யாதீனஞ்
சேர யோத்திக்
கோன்மகிழ ராமேசத் திலகாதீ னத்தலைமை
கொண்ட தூய
நூன்முறையி னுண்ணுணர்வி னெண்ணில்கலை நுணுக்கங்க
ணுகர்ந்த வாய்மை
தான்மருவித் தமிழ்மருவத் தனித்துயர்ந்த தகைமையெலாந்
தழுவிக் கொண்டோன். (3)

பண்பகத்தே மன்னவடி யாரடிக்கீழ்த் தாமன்னிப்
பரவி யேத்திச்
சண்பகத்தே வண்டடையாத் தன்மையென விருளணுகாத்
தன்மை வாய்ந்து
சண்பகப்பேர் கொண்டலர்ந்து நாற்றிசையு மருளாய
தனிவா சத்தான்
மண்படைத்தார்புகழ்படைத்தாரெனவானோர்நுகர்ந்துணரு
மறுவொன் றில்லான். (4)

ஈன்றகுலக் கொழுந்தாகி யிராமனு தப்பெயரி
னெழுந்த சீமான்
ளுன்றவத்தின் பயன்றுய்க்கக் கடல்சூழி லங்கைக்குத்
தான்முன் னேகி
மூன்றவத்தை கடந்தார்க்கும் பல்லோர்க்கும் நல்லனென
முன்ன நின்றே
யான்ரோர்க்கேவேண்டியசெய் தஞ்செழுத்தின் றிறனுய்ந்தா
னமர்ந்தா னுண்டே. (5)

ஆண்டமர்ந்த வன்னோர்க்கைம் முகப்பெருமான் மாதேவ
னருளால் வாய்த்த
தூண்டலிலா மணிவிளக்கே முழுமதியே யெனப்பிறருஞ்
சொலிப்பா ராட்ட
மாண்டகுசீர்ப் பெண்மகவொன் றீன்றனனுண் மகிழ்ந்தனனம்
முகவிற் கேதான்
வேண்டுமென வொருநாமந் தங்கச்சிப் பிள்ளையென
விளங்கத் தந்தான். (6)

தந்தசிறு குழவிக்குச் செங்கீரை கடந்ததுவே
தால்பின் னட்டி
வந்தவர்கண் முழுமணியே வயிரமே மாணிக்கக்
கொழுந்தே மன்னு

செந்தளிரே பைங்கிள்ளா யெனச்சொல்லிப் பாராட்டிச்
சேர்த்துத் தூக்கி
யிந்திரனூர் திருநாட்டி னமிர்தென்னச் சாயலிளந்
தோகை தன்னை. (7)

வேறு.

ஒத்தமதி நலங்கல்வி யொழுக்கந் தேசோ
டுயர்குடி நற் செல்வத்தி னுயர்வு வாய்ந்த
வித்தகனும் வயிரமுத்தென் றொருபே ரேற்று
வேளாளர் யினமென்னும் வேளா ளர்க்குச்
சித்தமகிழ்ந் துதவினான் றிருவி னீங்காச்
செல்விதனைப் பெற்றான்செல் வத்தைப் பெற்று
சித்தரையி லேயவற்கு வான்கண்டேங்குஞ்
சிதம்பரமென் றெழுந்ததம்மா விசைமே லோங்க. (8)

வாணுதலா டங்கச்சிப் பிள்ளை யீன்ற
மகனேமண் டலமேத்தும் வாய்மை யாளன்
மாணுடைய சிதம்பரப்பேர்ச் செல்வன் யோகம்
வருமிஞ்சி னீர்வினைஞன் வஞ்ச மில்லான்
கோணுமதிச் சென்னியன்றாட் கன்பன் றன்பக்
கூட்டுறவில் லாதார்க்குக் கோமான் போல்வான்
பேணுமுயி ரிற்சிறந்த தாயைப் போற்றும்
பெருமையுடைப் பெரியோன்வன் புகழ்பெற்றோனே

காநிலத்திற் பாவாத தேவி போலுங்
கண்ணகன்மண் மகளுக்கு மகளே போலும்
வானிலனுங் காணுதோர் மடந்தை போலு
மருவரவின் தத்தடம்வாழ் மங்கை போலும்
வேனிலிளங் காற்றேறின் வேள்கண் டைய
மிகக்கொண்டு மருண்டேங்கு மின்னே போலு
மானின்விழி மடநல்லார் போலு மென்ன
வாழ்த்தவிவள் வளர்ந்தாண்மேன் மதிய மோத்தே (10)

வேறு.

இல்லந் துறந்த பெரியோரு
மொருபோ தெண்ணத் துட்படுவார்
செல்வந் துறந்தா ரொருகாலஞ்
சேரும் பொருளைச் சேர்ந்தாள்வா
ரில்லந் துறவா தாய்நீயுந்
துறந்தா யெல்லாந் துறந்தார்போற்
செல்வந் துறந்தா யெமைத்துறந்தா
யெந்தா யெங்குச் சேர்ந்தாயோ. (11)

சேரா மன்னர் முடிசிதறத்
தேய்க்குஞ் செந்தாட் டமிழ்மாற
னாரா முயர்மும் முடிகாத்தா
னூரிற் றேன்று முயரியசீர்

நீரார் மேகங் காத்தாண்ட
  நிலையார் புகழ்வே ளாண்குலத்திற்
பாரார் புகழ்ந்து பாராட்டப்
  பிறந்தாய் மறந்தாய் பாராயோ. (12)

விழிக்கி லுலகந் தோன்றுமென
  விழியா தொழிந்தே வாழ்ந்தாயோ
பழிக்கும் பாவத் துக்கிடமாம்
  பாரே பாரா திருந்தாயோ
வழிக்கும் பிறப்பைக் காலமென
  வறிந்தங் கழியா தமர்ந்தாயோ
செழிக்குந் தனிவாழ் வேற்றதெனச்
  சிவன்சே வடிக்கீழ்ச் சேர்ந்தாயோ. (13)

போன திசைநீ பகர்வாயேற்
  புலப்ப மொழிவே மல்லாக்காற்
போன திசையே யாநாடிப்
  புகுதற் கஞ்சே மஞ்சேமால்
வான மதிபோ யிருண்டன்ன
  மண்ணி லெங்கள் குலமயங்கத்
தேனின் மொழியே தவச்செல்வி
  சேர்ந்தா யெங்குச் சேர்ந்தாயோ. (14)

பழனிஸ்தலத்தைச் சேர்ந்த ஆயர்குடி சம்ஸ்தானம்
ஜமீந்தார் மகா-ள-ள-ஸ்ரீ வேதாந்தத்துரையவர்களென்னும்
சச்சிதானந்த தெட்சிணாமூர்த்தி சுவாமிகளினது
மாணாக்கர்களுள் ஒருவராகிய ஷை சம்ஸ்தான வித்வான்,
மகா-ள-ள-ஸ்ரீ குமாரசுப்பைய நாயக்கரவர்கள்
இயற்றியது.

முப்பத்திரண்டடி ஆசிரியப்பா.

கார்கொண்ட நெடியகவ டண்டபித் திகைகலங்
காதுகதி காணிறுவிய
காட்சித் தெனும்படி நிவந்துதா ராகண
கணங்கள்புட் பித்தெனவளர்
கடம்பவன முஞ்சோம சுந்தர ரெழுந்தருள்
கஜானனவி மானமுஞ்சேற்
கண்ணிசா ணித்யதெரி சனமகிமை யும்மாட
கக்கமல தடமுந்திரைக்
கைகொடு குவான்மணி கொழித்தபுகழ் வைகையுங்
கன்னலொடு செந்நெல்கமழுங்
கழனிவள முஞ்சிகர கோபுரவி னோதமுங்
கன்னிகர மாடநிரையுங்
கல்விபத் துக்கிக் கருத்தலுங் களதபுத
ககனநட னமுமேவிய
கதிதரு மனந்தவிளை யாடலுஞ் சொக்கேசர்
கருணைப்ர வாகமழையும்

பார்கொண்ட வுபநிடத வேதாந்த சித்தாந்த
பண்டிதர் தமிழ்ச்சங்கமும்
பரவுதென் மதுரையும் பொருநைபொதி யமுமிலகு
பாண்டிரா மேசுரமெனும்
பரதலவி சேடவா தீனகர்த் தாசெண்
பகப்பிள்ளை கங்கைகுலசம்
பவசைவ சமயவே ளான்ராம நாதற்
பயின்றுபர கதிசேர்ந்தபின்
பண்புறுமி வன்மாது லன்மகள்கை பற்றியே
பலவறஞ் செய்துசிலையாய்ப்
பண்டுதிரி புரதகனர் கொண்டபருவதசிகர
பட்டணந் தனின்மகரயாழ்ப்
பாணசா வகச்சேரி யூரடைந் தாரபுஜ
பலவயிர முத்தெனுநர
பதியினுக் குத்தனது புதல்விதங் கச்சியாம்
பைங்தொடியை யீந்துசென்றான்
ஏர்கொண்ட விவர்களிரு வர்களுமில் லறதரும
வியல்புதவ றுதியற்றி
யெச்சமொரு மூன்றுதவு தந்தைகா லஞ்செல
விருந்ததாய் மக்களின்முனே
னெழிலுறு சிதம்பரப் பிள்ளையிவ் விந்தியா
வெங்கணும் புகழ்பரவவே
யிணையில்குரு நாக்கல்டிஸ்ட் ரிக்டிஞ்சி னீரென
வியந்துசர்ஜ் ஜிகள்கலெக்ட

ரிதயமகிழ் தருதமிழி லிங்கிலீஷ் முதலான
விதரபா ஷைகளினிபுண

னெதிகளுந் தணர்விபுதர் தென்புலத் தவர்கவிஞ
ரிரவலர் தமக்குதவுமீவா

னீசுரா லயதிருப் பணிமிகச்செய்பவ
னிவன்றனூற் புண்யமுறுமென்

றெண்ணிவித வாவிரத தங்கச்சிப் பிள்ளைமா
தெழுபதினெ டைந்துவயதிற்

சீர்கொண்ட தெண்டிரைப் பரவைசூழ் ஜெகதலத்
திற்கலியு கம்பிறந்து

சென்றதோ ரையா யிரத்தின்மேற் பதினொன்று
சேர்ந்தசௌ மியமீனமாந்

திங்களா றிருதேதி புகர்வார முத்திரந்
திகழுவா மதிநிறைந்த

தினமதிற் கேளிர்புத் திரர்கள்சூழ்ந் தோலிடத்
திருமுனீச் சுரன்முன்னரிற்

றெருளுறு சிதம்பரப் பிள்ளைருத் திராபிடே
கஞ்செயத் திகழ்சாவகச்

சேரிமா ளிகையிடந் தேவநிரு மிதஜோதி
திவ்யரத மீதிவர்ந்தித்

தேகம தொழிந்துநற் றெய்வத சரீரமாய்ச்
சிவபுரத் தரசிவாலை

தேவியுமை பார்வதி மகேசுவரி மனோன்மணி
திருப்பத மடைந்தனளரோ.

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியும்
மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத்

ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்

இயற்றியன.

பார்காத்த புகழுக்ர பாண்டியனாற் றளைப்பட்ட
பருமேகத்தை
யார்காத்துச் சிறைமீட்டா ராண்டகையோர் வேளாள
னன்றோ வந்தக்
கார்காத்தான் மரபினின்மும் முடிகாத்தா
னகர்வருமோர் கனவானான
சீர்காத்த சேண்பகமால் திருமரபு முன்னையினுஞ்
சிறக்குமாறு. (1)

சாற்றரிய சற்குணவான் றனென்னத் தனையறிந்த
தக்கோர் யாரும்
போற்றிடவே ஸ்ரீராமநாதனெனப் பெயர்கொளுமோர்
புனிதன் வந்தான்
ஆற்றன்மிகு மன்னவன்செய் யருந்தவநற் பயனாவோ
ரரிவை நல்லாள்
நாற்றிசையும் புகழவந்தாள் தங்கச்சிப் பிள்ளையெனு
நாமம் பூண்டே. (2)

By Mr. M. GOPALAKRISHNIER,
President, "*Manavar Sendamil Sangam,*" Madura,
and Tamil Pandit, Madura College.

(1&2) Who gave protection to and got the huge clouds imprisoned by Pandiya who ruled the world? Was not that a manly Vellala? A pious person named **Ramanatha Pillay**, praised as a man of rare virtues by worthy persons who knew him, was born to enhance the glory of the family of the famous **Shenbaga Pillay** who came of the above-mentioned Karkathars (cloud-protectors) caste still existing in **Mummudikathan.** A virtueus lady by the name of **Thangachi Pillay**, was, as a result of his religious austerities, born to this mighty personage so that all quarters may resound her praise.

கயலனைய கண்ணுடையிக் காரிகைதன்
கருத்திசையுங் கணவ னாக
மயலறுயாழ்ப் பாணச்சா வகச்சேரி
வாழ்மேலோன் வயிறு முத்துப்
பெயருடையோர் பெரியோனைப் பெட்புடனே
யுற்றிடுமோர் பேறு பெற்றவ்

வயிரனைய காதலனோ டுளமொருமித்
தில்லறநன் குனுற்று நாளில். (3)

(3) This fish-eyed beautiful lady had the good fortune to have for her loving husband an amiable person named **Vyramuthu Pillay**,(her cousin) of Chavakachery in Jaffna, and was leading the life of a house-holder in sweet concord with her husband dear to her as her own life,

பாராளு மன்னரினும் பண்புடையா ரெனக்கம்பன்
பகர்ந்த வந்தக்

காராளர் குலவிளக்காக் கவினுற்று விளங்கியவக்
கற்பின் மிக்காள்

வராருந் தன்கொழுந னிருதயமுந் தன்மனமு
மின்புறத்தஞ்

சீராளக் குலம்விளங்கச் சிதம்பரவள் ளலையீன்றாள்
செல்வ னாக. (4)

(4) This highly chaste lady who sprung up and shone beautifully as the light of the race of the Karalar(Vellala)praised by Kamban as superior even to Kings, brought forth, to the joy of her husband's heart as well as her own, *Chidambaram Pillay* of unbounded liberality, as the light of their family.

பூவுலகி லேதோன்றிற் புகழொடுதோன்
றுகவென்னும் பொய்யி லாத
தேவர் மொழிக் கோரிலக்காத் தோன்றியவப்
பெருந்தகையான் சிறப்பு வாய்ந்த
தாவறுதண் டமிழ்மொழியி றகவுறுமாங்
கிலமொழியிற் றுன்வல் லோனாய்
மேவியசீர்க் கொழும்பினைச்சார் குருநாக்கல்
எஞ்சினிரா மேன்மை யுற்று. (5)

(5) This noble-minded gentleman who stands as an example to the true saying of the divine poet Thiruvalluvar, "If born in this world, be born with qualities conducive to fame," secured, with considerable knowledge in the languages of sweet Tamil and worthy English, a high office as Engineer at Kurunagal in the vicinity of the renowned city of Colombo.

கற்பகமு மிருநிதியும் பொற்புறுசிந் தாமணியுங்
காரு நாண
அற்புதமா வண்டினருக் காடையன மாதியன
வளித்தென் றைக்குஞ்
சிற்பரனுக் கற்புறுநற் சிந்தையொடுஞ் சீரியர்தஞ்
சேர்க்கை யோடுந்

தற்கெவரு மிப்புவியி லொப்பிலனை
விப்பொழுதுந் தழைக்கின் றானல். (6)

(6) He still flourishes there, with unparalleled greatness, and pious devotion to Siva, the Enlightner of souls and also with the association of the good giving, to the admiration of all, clothings, food etc., to those that approach him, in such a manner as will make the Kalpaka tree, the great Nithis, the beautiful Chinthamani and clouds feel shame.

இத்தகைய பாக்கியங்கள் யாவுமொருங்
கெய்திமிக வின்ப முற்றும்
புத்திபுள ளாதலினத் தங்கச்சிப் பிள்ளையெனும்
பூவை மின்னாள்
நித்தியமின் மற்றவற்றிற் பற்றறுந்து முத்தியுற
நிமல னார்தம்
உத்தமநற் பொற்கழலைப் பத்தியொடு சித்தமகிழ்ந்
துற்றாண் மன்னோ. (7)

(7) Though Thangachi Pillai was blessed with these good fortunes, yet, as a wise lady, she relinquished all the transient earthly attachments and

reached the excellent golden feet of the Holy Supreme Being with devotion and great joy.

பாற்கடன்முன் பயந்தவுயர் பாஞ்சசனி
யப்பெயர்கொள் பண்பார் சங்கிற்

றோற்றியவோர் தூமணிபோற் றோன்றியநற்
சிதம்பரமால் சுற்றஞ் சூழ

வுற்றமிகு நற்குணமுஞ் சுகவாழ்வுந் தெள்ளறிவு
மெய்தி மேன்மேல்

மாற்றலரு மதித்திடுமெய்ம் மாண்புடனே நீடூழி
வாழி மாதோ. (8)

(8) May this great *Chidambaram*, born like the "gem of the purest ray serene" brought forth by the famous conch Panchajanya which sprang up from the Milky Ocean, lead a happy and prosperous life, possessing ever increasing pre-eminent virtues, and clearness of intellect with the true reputation of being respected even by his foes!